# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்
## விடைத்தாள்

**தரம் - 10**

---

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 2) 2 | 3) 3 | 4) 4 |
| 5) 1 | 6) 2 | 7) 4 | 8) 3 |
| 9) 3 | 10) 4 | 11) 2 | 12) 1 |
| 13) 4 | 14) 2 | 15) 4 | 16) 2 |
| 17) 1 | 18) 3 | 19) 4 | 20) 2 |
| 21) 1 | 22) 4 | 23) 4 | 24) 1 |
| 25) 1 | 26) 4 | 27) 3 | 28) 3 |
| 29) 2 | 30) 1 | 31) 3 | 32) 4 |
| 33) 1 | 34) 2 | 35) 3 | 36) 4 |
| 37) 2 | 38) 4 | 39) 1 | 40) 3 |

(40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

### பகுதி II

01) 1) நைவீர் + அலீர் + மைந்தீர் + இனி + துயரால் + நாடு + இறந்து

2) சரளமாகப் பேசும் திறன்
தெளிவான உச்சரிப்பு
தொனி ஏற்ற இறக்கம்
கேட்பவரை ஈர்த்து வைத்திருக்கும் நுட்பம்
முன்கூட்டியே தகவல்களைத் தெரிந்து வைத்தல்.
நவீன தொடர்பாடல் கருவியைக் கையாளும் திறன்.
மொழி புலமை சமயோசித சிந்தனை.

3) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப்பட்டது

4) தலைமைத்தொடர் - காந்தியடிகள் கூறினார்.
சார்புத்தொடர் - சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்
நிரப்பி தொடர் - என

5) இங்கு காணப்படுபவை எல்லாம் எனக்குரியவை.

6) கலை - ஆண்மான், (பெயர்) வினை - கலைத்தான்

7) முகவரி, உள்முகவரி, விளிப்பு, விடயத்தலைப்பு, செய்தி, முடிப்பு, ஒப்பம்

8) உருவக அணி
சுதந்திர நற்பயிர் - சுதந்திரமாகிய நற்பயிர்

9) ஐ முதல் கண் ஈறாக உள்ள வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்க வருகின்ற தொடர்
வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்க வருகின்ற தொடர்.

| | | |
|---|---|---|
| மீன் சந்தை | - மீனை விற்கும் சந்தை | - 2ஆம் வேற்றுமை |
| தலை வணங்கினான் | - தலையால் வணங்கினான் | - 3ஆம் வேற்றுமை |
| தசரதன் மகன் | - தசரதனுக்கு மகன் | - 4ஆம் வேற்றுமை |
| கண்ணீர் | - கண்ணிலிருந்து வரும் நீர் | - 5ஆம் வேற்றுமை |
| குளக்கரை | - குளத்தினது கரை | - 6ஆம் வேற்றுமை |
| கிணற்றுத்தவளை | - கிணற்றுனுள் வாழும் தவளை- | 7ஆம் வேற்றுமை |

(ஏதாவது ஒன்று எழுதியிருந்தால் சரி)

10) உதாரணந் தருதல் (20 புள்ளிகள்)

02) அ) முகவுரை
யுத்தத்தின் அழிவு
எனவே யுத்தத்தினை முடிவிற்குக் கொண்டுவர யுத்தத்தால் முடியாது.
சமாதானம் என்பதன் அர்த்தம்
அதனால் ஏற்படும் நன்மை
நாட்டு அபிவிருத்தி
சமாதானத் தீர்வு
முடிவுரை

ஆ) சபையோரை விளித்தல்
சபையோரை இடையிடையே முன்னிலைப்படுத்தல்
தர்க்க ரீதியாக முன்வைத்தல்
தொகுத்துரைத்து நிறைவு செய்தல்
மேடைப் பேச்சுக்குரிய அமைப்பு

சர்வதேச மகளிர் தினம் - அறிமுகம்
பெண்ணின் பெருமையும் முக்கியத்துவமும்
தாயாக இருந்து மனிதனை உருவாக்கல்
நல்ல சமுகத்தை உருவாக்கல்
இன்றைய பெண்நிலை
பணிகள்
கல்வித்துறை
விளையாட்டுத்துறை
தொழிற்துறை
அரசியல்
சமூகம்
மொழி, கலை, கலாசாரம் பேணல்
முடிவுரை

இ) உரையாடல் அமைப்புப் பேணல்
இருவர் உரையாடல்
பேச்சு மொழியிலும் அமையலாம்.
சிறுசிறு வாக்கியம்
நன்மை தீமை நிறுவல்

தொலைக்காட்சி சாதகம்
கட்புல செவிப்புல சாதனம்
நிகழ்ச்சிகள் இன்பம் பயப்பனவாய் இருத்தல்.

அறிவூட்டல்
அன்றாட செய்திகள்
கலை வளர்ச்சி
மொழி சமய விருத்திக்கு உதவுதல்
கலாசாரம் பேணல்
அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் விழிப்புணர்வு

பாதகம்
பலரும் தீமை
தொலைக்காட்சி ஊடகம், விளம்பரம்
மக்கள் மத்தியில் செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்தல்.
மனவுணர்ச்சிகளைத் தூண்டல்
செய்திகள் ஊடாகப் பதட்டம்
மாணவரைத் தவறான வழியில் செலுத்துதல்.
மின்சாரம் விரயம்
சோம்பேறியாக்கல்

ஈ) சிறுகதை அமைப்பில் இருத்தல்
திருப்புமுனை இருத்தல்
கதைக்கரு புதிதாய் இருத்தல்.
முடிவு வித்தியாசமாக அமைதல். (25 புள்ளிகள்)

03) சுருக்கம்
மக்களின் வாழ்க்கையானது மொழி வளர்ச்சியைக் கொண்டே அளவிடப்படுவதால் மொழி ஒரு வேகமுடுக்கியாக அமைகிறது. எனவே மனிதன் தன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக இடுகுறிச் சொல்லையும் காரணச் சொற்களையும் உபயோகிக்கின்றான். வேற்று மொழி பேசுபவர்களுடன் கலந்து வாழ்வதன் மூலமும் புதிய சொற்களைத் தன் தாய் மொழிக்குள் உள்வாங்குகிறான். இத்தகைய வேற்றுமொழி வாயிலாக வரும் சொற்கள் தாய்மொழியின் பண்புகளைப் பெறுவதுடன் காலக் கிரமத்தில் மூலச் சொற்தரத்தையும் பெற்று விடுகின்றான்.
(10 புள்ளிகள்)

04) பூரண வாக்கியத்தில் விடை அளிக்கப்பட வேண்டும்.
1) இப்பாடலில் குறிப்பிடப்படுவது சிட்டுக்குருவி பற்றியதாகும்.
2) சிட்டுக்குருவியின் தோற்றமாக நெல்மூக்கு, கடுகுக்கண் காற்றில் நீந்தும் பஞ்சுடல் என வர்ணித்துள்ளார்.
3) கள்வருக்குப் பயமில்லாச் செல்வம் அன்புச் செல்வம் ஆகும்.
4) அதன் சுறுசுறுப்பு வெள்ளம் போல இருப்பதாகக் கூறுகிறார்.
5) விண்ணும் மண்ணும். (10 புள்ளிகள்)

05) துண்டுப்பிரசுரம்
அமைப்பு - 4 புள்ளிகள்
உள்ளடக்கம் - 8 புள்ளிகள்
மொழிநடை - 3 புள்ளிகள்
1) தலைப்பு - போதையை ஒழிப்போம்
போதையால் ஏற்படும் பாதிப்பு / சீர்கேடு
2) பொதுவான விளிப்பு
வெளியிடுவோர் பெயர், முகவரி, திகதி
அல்லது
அறிக்கை

விடயம் பற்றிய தலைப்பு இடுதல்.
யாருக்கு சமர்ப்பித்தல்
நியமமொழியில் எழுதுதல்
சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதுதல்.

பிரதம விருந்தினரை அழைத்துவரல்
மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்புரை
தலைமையுரை
ஆசியுரை
நிகழ்வுகள்
சிறப்பு விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை
பரிசு வழங்கல்
நாடகம்
நன்றியுரை
தமிழ்த்தாய் வாழ்த்து (15 புள்ளிகள்)

## பகுதி III

01) 1) அ) கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள், பழக்கவழக்கங்கள் பண்பாடுகள், நம்பிக்கைகள், தொழில்முயற்சிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களது உள்ளத்திலிருந்து இயல்பாகவே ஊற்றெடுக்கும் பாடல்கள் ஆகும்.
ஆ) நாடோடிப்பாடல்கள், கிராமியப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள்
2) அ) திரிகூடராசப்பகவிராயர் ஆ) வசந்தவல்லி
3) சு. தியடோர் பாஸ்கரன்
4) குகன், பரதன், கையேயி, கோசலை, சுமித்திரை
5) அ) புகழேந்தி ஆ) வயல்
6) காகிதம் மிச்சப்படுத்தப்படுகிறது. சுற்றுப்புறச் சூழல் நன்மை ஏற்படுகிறது.
இயற்கை பாதுகாக்கப்படுகிறது. சொற்பிழைகளைக் கண்டுபிடிக்கலாம்.
திருத்தங்கள் கம்பியூட்டரில் மேற்கொள்ளலாம் சொற்களின் எண்ணிக்கையைக் கண்கிடலாம்
7) குகனால் பரதனுக்கு
8) 1) காட்சிப்படிமங்கள் 2) ஒலி 3) படத்தொகுப்பு
9) சேர். பொன். இராமநாதன், பிறிற்றோ
10) அ) மடைத்தலையில் சிறிய மீன்களை ஓடவிட்டு பெரியமீன் வரும்வரை அடக்கமாகக் காத்திருத்தல்.
ஆ) அடக்கமுடையவருக்கு (20 புள்ளிகள்)

02) அ) உறவினர்களும் தேவர்களும் தொழும்படியான சிறப்பினைப் பெற்ற கோசலை அன்னையைக் குகன் பார்த்து "வெற்றி மாலையையுடைய அரசனே: இவன் யார்" என்று பரதனைக் கேட்டான். அதற்குப் பரதன் 'இவன் அரசர்கள் எல்லாம் தன் திருவடிகளில் தங்கியிருக்கச் செய்த தசரதன் என்றும் சக்கரவரத்தியின் மூத்த மனைவி. மூவுலகங்களையும் படைத்த நான்முகனை தன் உந்திக் கமலத்தில் தோற்றுவித்த திருமாலின் திருஅவதாரமான இராமபிரானை, தான் மகனாகப் பெற்றதால், அடைதற்கு உரிய செல்வத்தை யான் தோன்றியதனால் இழந்த பெருமையுடையவன் என்று கூறினான்.

**சிறப்பு**
இவ்வடிகளில் தசரத மன்னனின் வீரம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது தசரத மன்னனின் புகழும் வீரமும் அரசர்கள் திறை செலுத்துவதற்காக முற்றத்தில் குழுமும் நிலையும் புலப்படுத்தப்படுகிறது.

ஆ) கற்றறிந்தார் முன்னால் தாம் கற்ற கல்விப் பொருளை எடுத்துரைத்தலும், அறிவிற் சிறந்தோரைச் சேர்தலும், எள்ளளவும் பிறரிடம் இரவாது தான் பிறருக்கு ஈதலை எந்த நிலை செய்து வாழ்வதும் இனிமையானவை ஆகும்.

**சிறப்பு**
இவ்வடிகளில் கல்வியின் மேன்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தான் கற்ற கல்விப் பொருளை கற்றறிந்தோர் முன் நிலையில் எடுத்துக் கூறல் சிறப்பானது என எடுத்துக் கூறப்படுகிறது.

இ) சினிமா பாஷை எமக்கு பழக்கமில்லாத ஒன்றாக விளங்குகிறது. வேறு நாடுகளில் இந்த மொழி பெருகியுள்ளது. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாமைக்கு எம் பழக்கமின்மை தான் காரணம். சினிமா பாஷை மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித சமூகத்திற்குப் பொதுமையானது.

**சிறப்பு**
சினிமா மொழியை நாம் பழக்கப்படுத்த வேண்டும் என இவ்வடிகள் எடுத்துக்காட்டுகின்றன. சினிமா மொழி எமக்கு பழக்கமின்மையையும் வேறு நாடுகளில் வளர்ச்சியடைந்துள்ளமையையும் இவ்வடிகள் கூறி நிற்கின்றன.

ஈ) முதல் பொழுதிலே நான் ஒரு பெரிய உண்மையை உணர்ந்தேன். கணினி என்பது மிகப் பூதாகாரமான வேலைக்காரன். கூறுகின்ற பணிகள் அனைத்தையும் சிறப்பாகச் செய்யும். ஆனால் பிழையாகக் கட்டளைகளைக் கொடுத்து விட்டாலோ தான் தலைவனாகிவிடும். பின்னர் நீங்கள் அதற்கு அடிமைதான். வேறொன்று அச்சப்பட்டு அச்சப்பட்டு இதை அணுகினால் அது தூரத் தூரப் போய்விடும்.

**சிறப்பு**
கணிப்பொறியின் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அது மிகப் பெரிய வேலைக்காரனாகவும், பணிகள் அனைத்தையும் சிறப்பாக செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளதாகவும் கூறப்படுகிறது.
(20 புள்ளிகள்)

03) அ) பரதனிடம் அன்பும் மதிப்பும் செலுத்தியவன்.
இராமனைப் பெற்ற தாய் கோசலை என அறிந்ததும் பாதத்தில் விழுந்து அழுது கிடந்தவன்.
இராமனும் தம்பியரும், குகனும் ஒன்று கலந்து நாட்டை ஆட்சி செய்து காப்பாற்றுமாறு கோசலையின் வாயாற் கூறத்தக்க பெருமைக்குரியவன்.
கைகேயின் கொடுமை அறிந்த பின்னரும் தன் தாயாகக் கருதி அவளை வணங்கியவன்.
மலை போன்ற தோளையும் ஆண் யானையையும் ஒத்தவன்.

ஆ) துன்பங்கள் யாவற்றையும் உண்டாக்கியவன்.
பழியாகிய குழந்தைக்கு வளர்ப்புத்தாய்
பாழான தீவினை உடைய இவள் வயிற்றிலே நீண்ட நாட்கள் இவள் வயிற்றில் கிடந்தேன்.
எனக்கும் உயிர் ஆகிய சுமை குறைந்து தேயும்படி உடல்கள் எல்லாம் தோன்றும்படி இவள் ஒருத்தி மட்டும் துன்பமற்ற முகமுடையவளாக இருக்கிறாள்.
இவளது கவலையற்ற முகத்தைக் கொண்டு இவன் யார் என்பதை அறிந்திடா விடில் நான் கூறுகிறேன். இவள் என்னைப் பெற்ற கைகேயி ஆவாள்.

அல்லது

கம்பியூட்டர்

அ) கருப்பொருளோடு நெருங்கிய தொடர்பு உடையதாகக் காணப்படுகிறது.
கதை முழுவதும் கம்பியூட்டர் என்ற சாதனமே பேசப்பட்டு பொருளாகக் காணப்படுகிறது.
பிரதான பாத்திரங்களான தந்தை (கதை சொல்லி) தாய், அரவிந்தன் முதலியோரின் நகர்வுகள் யாவும் கம்பியூட்டருடனே மையப்படுத்தி அமைந்துள்ளது.
எமது அன்றாட வாழ்க்கையில் கம்பியூட்டரின் தாக்கம் எவ்வாறு உள்ளது என்பதையும் புதிய தலைமுறையின் முக்கியத்துவம் எடுத்துக்கூறல்.
இன்றைய வாழ்வு இயந்திரதனத்திற்கு அடிமையாகிவிட்ட நிலையையும் கம்பியூட்டர் மூலமே வெளிக்காட்டப்படுகிறது.
கம்பியூட்டர் அவசியம், நன்மை, படிப்பினை அனைத்தும் கம்பியூட்டர் வாயிலாகவே உணர்த்தப்படுகிறது.

ஆ) 1) காளமேகம் புலவர் ஒரு ஊரில் பாஷை தெரியாத திம்மி என்ற தாசியுடன் இரவு கழித்தல்.
"ஏமிரோவோலி" எந்துண்டி வஸ்தி"

2) நளவெண்பா
இருதுபர்ணன் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்தில் கலந்து கொள்ளச் செல்லல். தான்றிக்காய் பத்தாயிரம் கோடி காய்கள் எனக்கணக்கிட்டுச் சொல்லல்.

3) ஏழைப்புலவர் பரம்பரைச்சொத்து பாக்குவெட்டி உயிருக்கு அடுத்தபடி அதுதான் எல்லாம் காணாது புலவருக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.
"விறகு தறிக்க, கறிநறுக்க.... பாக்குவெட்டி இறகு முளைத்துப் பறந்ததுவே, எடுத்தீராயிற் கொடுப்பீரே" (3 சம்பவங்களும் விளக்கி எழுதல் வேண்டும்.)

இ) மொழிநடை

எளிய சொற்களைக் கையாண்டமை.
ஆங்கில வசனம் கையாண்டமை
வடமொழிச்சொற்கள் பயன்பாடு
வர்ணனை, உவமை பயன்படுத்தியமை.
ஆங்கில, கலைச்சொற்கள் பயன்பாடு
நகைச்சுவைக் கதைகள் கையாண்டமை
சிறுசிறு வாக்கியம்

(15 புள்ளிகள்)

04) அ) சினிமா கமராவால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியல்ல, நாடகமுமல்ல, வாய்ப்பேச்சாலே சொல்ல முடியாது. எந்தவொரு படத்திலும் இழையோடும் மையக்கருவைச் சார்ந்திராத காட்சிப்படி மத்துக்கும் ஒலிக்கும் சினிமாவில் இடமில்லை. சினிமாவின் சிறப்பு அம்சம் அதற்குத் தனித்துவத்தை அளிக்கும் சினிமா மொழியாகும்.

ஆ) சினிமா மொழி அழுத்தமாகப் பயன்பட்டிருத்தல் (காட்சிப்படிமம், ஒலி, படத்தொகுப்பு)
பொருத்தமான இழையோடும் மையக்கரு கொண்டிருத்தல்.
காட்சிப்படிமங்களைப் பொருத்தமாக இணைத்தல்.
மையக் கருவைச் சாராத எதனையும் இணைக்காதிருத்தல்.
குறியீடுகள் போன்ற முறைகளால் வளப்படுத்தியிருத்தல்.

இ) ஆரம்பகாலகட்டத்தில் புராண நாடகங்களே படமாக்கப்பட்டன.
நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்தே அவை படமாக்கப்பட்டன.
சென்னை நாடகக் கம்பனி கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகத்தைப் படமாக்கின.
இயக்குநர், நடிகர், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர் நாடகத்துறையிலிருந்தே வந்தவர்கள்.
நாடகப் பண்பைப் பேணல்.
(உ + ம்) கமராவைப் பார்த்துப் பேசல்.
வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைதல்.
வசனத்தைக் கத்திப் பேசுதல்.

**குற்றால மலையின் சிறப்பு**

1. குரங்குகள் பழங்களைப் பறித்துண்ணும்
2. தேனருவி விழுகின்ற நீர்வளம்
3. அருவி முத்து கொண்டு வரல்
4. மலைச்சாரலில் கிழங்கு கிள்ளி எடுத்தல்
5. வறுத்த தினை இடித்தல்
6. சித்தர்கள் காயசித்தி மூலிகை வளர்க்கும் இடம்.
7. சிவபெருமான் கோயில் கொண்ட இடம்.
8. பெண்கள் சிற்றில் விளையாடல் தேனெடுத்தல்
9. சம்பகமலர் பூத்திருத்தல்.

**குற்றால குறவஞ்சி அமைப்பு**

தெய்வம், தலைவன், வீதி உலாவரும் போது ஏழு பருவ மங்கையரும் கண்டு அவர் மீது மயங்கி நிற்பர். அவர்களில் சகல நலன்களும் பொருந்திய தலைவி ஒருத்தி தலைவனைக் காதலிப்பாள். தலைவன் எவருக்கும் எட்டாத தன்னிடத்தை அடைந்து விடுவான். இதன்பின் தலைவியின் தவிப்பும் தோழிமாரை தூதனுப்புவதும் குறத்தி வந்து குறி சொல்லுதலும் நடைபெறும். காதலியர் தலைவனின் சிறப்பினை வாழ்த்தலுடன் முடிவுறுவதாக அமையும். (15 புள்ளிகள்)

05) **மீனவர் பாடல்**

மீனவர் பாடலில் ஒவ்வொன்றையும் நம்பி ஒவ்வொன்று இருப்பது போல நான் உன்னை நம்பி இருக்கிறேன். உனக்காகவே கஷ்டப்படுகிறேன். என் உள்ளம் உன்னையே நினைக்கிறது.

ஆதலால் அது உன்னிடமே உள்ளது.

**காதல் பாட்டு**

காதல் நிறைவேறாவிட்டால் தான் இறந்து விடுவேன் எனக் கூறும் காதலன் அவளது வாட்டம் போக்கிடக் கூறும் நம்பிக்கை வார்த்தைகளாக ஏழைக்குத் தீங்கு செய்வதை அல்லா பொறுக்கமாட்டான். கனவிலும் உன்னையே கண்டேன். காசு வேண்டுமா, கதைத்திருக்க வரட்டுமா, தூது வரக்காட்டட்டுமா உன் சம்மதத்தைத் தெரிவிப்பாய் எனக் கேட்டல் காதலியை நீலவண்டு, மருதங்கிளி, ஏலங்கராம்பு சீனச்செப்பு சிங்காரப் பூநிலவு என உருவப்படுத்தல்.

06) **அ - திறமை**

தன்னை எதிர்த்து நின்ற விசுவநாதபிள்ளையுடன் சிதம்பரத்தில் வாதஞ்செய்து பின் அவரது கொள்கைகளை ஏற்றும் அவரையே குருவாகக் கொண்டவர்.

விசுவநாதபிள்ளை நடாத்திய கூட்டத்தை அவதானித்தல்.

பிறிற்றோவின் தவறை சுட்டிக்காட்டல்

திறமையும் நேர்மையான ஒருவரை சட்டசபைக்கு நிறுத்திய துணிவு மிக்கவர்.

**நேர்மை**

தமக்குச் சார்பாக நாவலர் இருப்பாரானால் பிராமணருக்கு வெற்றி கிட்டுமாறு தாம் வழக்கை நடாத்தி முடிப்பதாக எழுதிய நம்பிக்கைத் துரோகத்தை வெளிப்படுத்தியமை.

பிறிற்றோவை ஆதாரத்துடன் வெளிப்படுத்தல்.

07) **அ - சோழ நாட்டின் சிறப்பு**

நீர்வளம், நிலவளம் பொருந்திய இயற்கை வளம் பொருந்திய நாடு.

குரங்குகள் பலாப்பழத்தைப் பறித்தது என்று உழவர் சங்கால் எறிய அதற்குப் பதிலாக குரங்குகள் இளநீரைப் பறித்து எறியும் வளம் பொருந்திய நாடு.

பலாப்பழம், சங்குகள் விளையும் இடம். குரங்கின் செயலும் உழவர் செயலும் - சோழ நாட்டு வளத்தை எடுத்துக் காட்டப்படுகிறது.

**ஆ - சோழன் வீரம்**

அரசர்க்கு அரசன்

கொங்கு நாட்டவரைப் போரில் வென்றவன்.

அவர்களுக்குச் சுவர்க்கம் அளித்தவன்.

**இ - பிறை**

பிறை - இளம்பிறைச்சந்திரன்

பிறை (இறை) - மன்மதன்

பிறை(த்தல்) - சொரிதல் / இறைத்தல்

வெப்பமுள்ள பிறைச்சந்திரனில் நிலவொளியாலும் கரும்புவில்லையுடைய மன்மதன் காரணமாகவும் உடல் தளர்ந்து பெண்கள் கண்ணீர் சொரிகின்றனர். (10 புள்ளிகள்)